IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.108/2015 E.P.NO. R.C.O.P. I.A.

Deposition of Witness PW-2

| | |
|---|---|
| Name | : நாராயணசாமி |
| Father's Name /W/o | : ராஜூ ரெட்டியார் |
| Religion | : இந்து |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : - |
| Address | : மாண்காட்டுசேரி கிராமம், அரக்கோணம், |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.03.2018

WEB COPY

Chief Examination:

**குறுக்கு விசாரணை -**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. நான் வாதிக்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் என்னுடைய உடன் பிறந்த சகோதரர். பணம் பெற்று கொண்டு ஒப்பந்தப்படி சொத்தை பதிவு செய்து தர வராததால் தாவாவை வாதி போட்டுள்ளார். ஒப்பந்த தேதி 03.11.1993 ஆகும். ரூ57500 பணம் ஒப்பந்தத்தின் படி கொடுக்கபட்டது. ஒப்பந்தம் போடும் போது கோபால், பாலசுந்தரம், சிவராமன், இடத்திற்கு சொந்தக்காரர் ரத்தினம் ஆகியோர் இருந்தனர். ஒப்பந்தம் மேற்படி தேதியில் என் வீட்டில் வைத்து தான் எழுதப்பட்டது. ஒப்பந்தம் எழுதும் போது ரத்தினம் தரப்பில் அவர் மட்டும் தான் இருந்தார். முதலாவது சாட்சி கையொப்பத்தை கோபால் போட்டார். இரண்டாவது சாட்சி கையெழுத்தை நான் போட்டேன். ஒப்பந்த பத்திரத்தை சிவராமன் எழுதினார். சிவராமன் என்பவர் தக்கோலத்தை சேர்ந்தவர் எங்களுடைய உறவினர் கிடையாது. ஒப்பந்ததின் படி பணத்தை பாலசுந்தரம் தான் ரத்தினத்திடம் வாங்கி கொடுத்தார். மேற்படி பணத்தில் ருந500, ரூ1000 மற்றும் அனைத்து மதிப்புடைய நோட்டும் கலந்து தான் இருந்தார். ஒப்பந்தம் போடும் போது ரத்தினம் எவ்வாறு இருந்தார் என்றால் உடம்பு முடியாமல் தான் இருந்தார். அவருடைய மகளின் கல்யாண செலவிற்காக தான்

பணத்தை பெற்றார். அந்த ஒப்பந்தத்தில் திருமணத்திற்காக பணம் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்படிருக்கலாம். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 15 செண்டாகும். தாவா சொத்தின் செக்குபந்தி விவரம் கிழக்கில் பக்தவச்சலம் கால்வாயும், மேற்கில் கால்வாயும், வடக்கில் ஆர்.நாரயாணசாமி நிலமும், தெற்கில் கண்ணியம்மாள் நிலமும் உள்ளது. இந்த செக்குபந்தி விவரம் 44 செண்டுக்களுக்காகும். தாவா சொத்து இரண்டு பகுதியாக உள்ளது. மீதம் உள்ள பகுதிக்கு கிழக்கில் பொது கால்வாயும், மேற்கில் குளமும், வடக்கில் ஆர் சுப்பிரமணி நிலமும், தெற்கில் கண்ணியம்மாள் நிலமும் உள்ளது. பணம் பெற்ற உடனேயே நிலத்தை ஆர் சுப்பிரமணியிடம் ஒப்படைத்து விட்டார்கள். நான் இந்த தாவாவில் வாதிக்கு சார்பாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றும் தாவாவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் தவறு.

WEB COPY